ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி :

உ

ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதரவர்கள் அருளிச்செய்த

# ஆதித்ய ஸ்தோத்ர ரத்னம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு
**ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்**
அருளிய திவ்ய ஸ்ரீமுகத்துடனும்

மாயவரம், ஸாமவேத ச்ரௌத ஸ்மார்த்த லக்ஷண
வித்வான் வேதாந்த சிரோமணி தர்மஜ்ஞ
**ம. ராமனாத தீக்ஷிதர்**
எழுதிய தமிழ் உரையுடனும்



ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1.

இரண்டாம் பதிப்பு : 1972

விலை : ரூபாய் ஒன்று

விப்ரீடி அச்சகம், சென்னை-1.

இரண்டாம் பதிப்பு: 1972

விலை: ரூபாய் ஒன்று

விபிஎஸ்டி அச்சகம், சென்னை-1.



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## मुद्रा

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्यश्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित श्रीकाञ्चीकामकोटि पीठाधिपतिजगद्गुरूणां आचार्यपादानां नारायण-स्मरणपूर्विकेयमाज्ञा निवेद्यते ।

शिवतत्त्वविवेक-शिवार्कमणिदीपिकादिशताधिकग्रन्थकर्तॄणां शिव-भक्तधुरंधराणां श्रीमदप्पय्यदीक्षितेन्द्राणां कृतिषु आदित्यस्तोत्ररत्ननामकं स्तोत्ररत्नमुत्कर्षेण राजते ।

अस्मिन् स्तोत्रे, स्वेनैव रचितायां रत्नप्रकाशिकाख्यायां वृत्तौ च श्रीदीक्षितेन्द्रैः भगवत्सूर्यसंबन्धीनि मण्डल-रथ-चक्र-अश्वादितत्त्वानि, तदुपासकदेवादि विशेषाः, तत्किरणैः लोकशुद्धिप्रकाराः, तन्मण्डलान्तर्यामिणः परमेश्वरस्य महिमा, तदुपासनेन जायमानानि फलानि इत्यादयो विषयाः श्रुतिस्मृतिपुराणादि प्रमाणोपष्टम्भेन प्रकटीकृताः ।

एतादृशस्तुतितल्लजं गैर्वाणवाणीपरिचितिरहितानां द्राविडीज्ञानां सुलभबोधाय मायूरक्षेत्राभिजन धर्मज्ञ श्रीरामनाथदीक्षितविरचितेन श्रीदीक्षितेन्द्र वृत्त्यनुसारिणा द्राविड्यनुवादेन सनाथीकृतं श्रीकामकोटि-कोशस्थानाधिकारिभिः मुद्रापितमवलोक्य सन्तुष्यामः ।

आस्तिकाः एतत्स्तोत्रमणेः पठनश्रवणादिना सवितृमण्डलमध्य-वर्तिनमीश्वरं सेवमानाः तत्कृपया आरोग्यादि निखिलभाग्यावहा भवन्तु

विजययात्रास्थानम्<br>आरणि<br>विकारि फाल्गुनशुद्ध चतुर्दशी

नारायणस्मृतिः

# பொருளடக்கம்

ஸ்ரீ ராம ஜயம்

॥ श्री शिवाभ्यां नमः ॥

## முகவுரை

ஆதித்ய ஸ்தோத்ர ரத்னம் என்பது ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதரவர்கள் இயற்றியது. ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதரவர்கள் ஸ்ரீ பரமசிவனின் அவதாரமென்று சிவ ரஹஸ்யம் முதலிய நூல்கள் கூறுகின்றன. ஆசார்ய பகவத்பாதாள் ஸ்தாபித்த ஆறு மதங்களில் சைவ மதத்தைத் தழுவி சிவார்க்கமணி தீபிகை முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். பரிமளம், நியாய ரக்ஷாமணி முதலிய பல நூல்களை இயற்றி அத்வைத மதத்தை நிலைநாட்டியுள்ளார். சிறிய ஸ்தோத்ரம் முதல் பெரிய ஶாஸ்திர க்ரந்தங்கள் வரை 104 க்ரந்தங்களை பாமரர் முதல் பண்டிதர் வரை ரஸிக்குமாறு இயற்றியுள்ளார்.

அதில் இந்த ஆதித்ய ஸ்தோத்ர ரத்னம் என்பது ஸூர்ய பகவானைப்பற்றியுள்ளது. இதில் வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும், இதிஹாஸ புராணங்களிலும் ஸூர்ய பகவானைப்பற்றி வர்ணித்திருக்கும் விசேஷங்களை 12 சுலோகங்களில் சுருக்கமாகவும், எளியதாகவும் கூறுகிறார். இந்த ஸ்தோத்ரத்தைப் படிப்பவர்கள் ஸூர்யனைப்பற்றிய விசேஷங்கள் அனைத்தையும் அறிந்துகொள்ள முடியும். ஸூர்ய பகவானைப்பற்றிய விவரங்களை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யம். ஸூர்யன் ப்ரத்யக்ஷமான தெய்வம். மற்ற தெய்வங்களை நிரூபிப்பது கடினமான முறை. ஸூர்யனை நிரூபிப்பது வெகு ஸுலபம். उतैनं गोपाः अदृशन् अदृशन् उदहार्यः என்று இடையர்கள், ஜலம் எடுக்கும் ஸ்த்ரீகள் இவர்கள்கூட, நன்கு காணுகிறார்கள் என்று வேதம் கூறுகிறது.

இந்துக்களல்லாதவர்கள்கூட காலையில் கிழக்கே பார்த்துக்கொண்டு ஸூர்யனை வணங்குகிறார்கள். அயல்தேசங்களில் உள்ளவர்களும் ஸூர்யனைப்பற்றிக் கொண்டாடுகிறார்கள்.

இவ்விதம் எல்லோராலும் தெய்வமாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஸூர்யனைப்பற்றி வேத மாஸ்த்ரங்கள் என்ன கூறுகின்றன என்பதை நாம் அறியவேண்டாமா? அவ்விதம் அறிவது ஸாதாரண ஜனங்களுக்கு ஸுலபமல்ல. இந்த ஸ்தோத்ரத்தைப் படித்தால் எளிதில் தெரிந்து கொள்ளலாமென்பது படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும்.

மஹா பாரதத்தில் பாண்டவர்கள் காட்டில் வாஸம் செய்யும்பொழுது ரிஷிகள், பட்டணத்து ஜனங்கள் பலர். தர்மபுத்ரருடன்கூட இருக்கிறார்கள். தன்னை அண்டிய இந்த ஜனங்களுக்கு ஆஹாரம் அளிக்கவேண்டிய பொறுப்பு தர்மபுத்ரருக்கு ஏற்படுகிறது. அப்பொழுது ஸூர்ய பகவானை துதித்து அவரிடமிருந்து அக்ஷய பாத்ரத்தைப் பெறுகிறார். அந்த பாத்ரம் எவ்வளவு பேர்களானாலும் அவர்களுக்கு ஆஹாரமளிக்கின்றது. இவ்விதம் ஸூர்யனுடைய மஹிமை வர்ணிக்கப்படுகிறது.

ஸ்ரீமத் ராமாயணத்திலும் இராவணனுடன் யுத்தம் செய்து சோர்வடைந்திருக்கும் ஸமயத்தில் இராமபிரானுக்கு அகஸ்த்ய மஹர்ஷி ஸூர்ய பகவானின் அருள் உண்டாவதற்காக, ततो युद्ध परिश्रान्तं समरे चिन्तया स्थितम् । रावणं चाग्रतो दृष्ट्वा युद्धाय समुपस्थितम् ॥ என்றாரம்பித்து ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரத்தை உபதேசிக்கின்றார்.

ஸ்ரீமத் பாகவதத்திலும் ஸத்ராஜித் என்பவர் ஸூர்ய பகவானை உபாஸித்து ஸ்யமந்தகம் என்ற மணியைப்பெற்றார்.

அதன் பெருமை தினம் 8 பாரம் தங்கத்தை விளை விக்குமென்றும், துர்ப்பிக்ஷம் முதலியது ஏற்படாதென்றும் ப்ரஸித்தி பெற்றது.

மற்றும் பல புராணங்களில் ஸூர்ய பகவானைப்பற்றிய விசேஷங்கள் பலவாருகக் கூறப்படுகின்றன.

ஸ்கந்த புராணத்தில், आरोग्यं भास्करादिच्छेत् என்று ஸூர்யன் அருள் இருந்தால் வ்யாதிகள் அணுகா என்று கூறப்படுகிறது.

உபநிஷத்துக்களில் ஸூர்யனை ப்ரஹ்மமாக உபா ஸனம் செய்யும்படியும் அவரே நற்கதியை அடைவிக்கின்ரு ரென்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் வர்ணிக்கப்படுகிற ஸூர்ய பகவானின் இரதம் முதல் ஶ்லோகத்தில் 10,000 யோஜனையுள்ளதென்றும், ஒரு சக்ரம், ஏழு சந்தஸ்ஸுக் களாகிய குதிரைகள் உள்ளதென்றும், மஹாமேரு பர்வதத் தைச் சுற்றிவருகிறதென்றும் கூறப்படுகிறது.

இரண்டாவது ஶ்லோகத்தில் ஸூர்ய மண்டலத்தில் உள்ள ஆதித்யன் முதலிய 7 தேவர்கள் ஒவ்வொரு மாதத் திலும் ஸூர்ய பகவானை உபாஸிக்கின்ருர்கள் என்று கூறப்படுகின்றது. மூன்ருவது ஶ்லோகத்தில் ஸூர்ய கிர ணங்கள் ப்ராணிகளின் சரீரத்தில் நாடிகள் வழியாகப் ப்ரவேசித்து ஹ்ருதயத்தை வ்யாபித்திருக்கின்றன என்றும், கிரணங்கள் மூலம் பெருகும் அமிருதத்தை தேவர்கள், பித்ருக்கள், மனிதர்கள் பருகுகிருர்களென்றும், வெப்பம், மழை, பனி இவைகளைக் கொடுத்து ப்ராணிகளைக் காப்பாற்றுகின்றனவென்றும் கூறப்படுகின்றது.

நான்காவது ஶ்லோகத்தில் மேரு பர்வதத்தைச் சுற்றி வரும் ஸூர்யன் தான் ஓரிடத்தில் இருந்துகொண்டு கிர

இந்துக்களல்லாதவர்கள்கூட காலையில் கிழக்கே பார்த்துக்கொண்டு ஸூர்யனை வணங்குகிருர்கள். அயல்தேசங்களில் உள்ளவர்களும் ஸூர்யனைப்பற்றிக் கொண்டாடுகிருர்கள்.

இவ்விதம் எல்லோராலும் தெய்வமாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஸூர்யனைப்பற்றி வேத மாஸ்த்ரங்கள் என்ன கூறுகின்றன என்பதை நாம் அறியவேண்டாமா? அவ்விதம் அறிவது ஸாதாரண ஜனங்களுக்கு ஸுலபமல்ல. இந்த ஸ்தோத்ரத்தைப் படித்தால் எளிதில் தெரிந்து கொள்ளலாமென்பது படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும்.

மஹா பாரதத்தில் பாண்டவர்கள் காட்டில் வாஸம் செய்யும்பொழுது ரிஷிகள், பட்டணத்து ஜனங்கள் பலர். தர்மபுத்ரருடன்கூட இருக்கிருர்கள். தன்னை அண்டிய இந்த ஜனங்களுக்கு ஆஹாரம் அளிக்கவேண்டிய பொறுப்பு தர்மபுத்ரருக்கு ஏற்படுகிறது. அப்பொழுது ஸூர்ய பகவானை துதித்து அவரிடமிருந்து அக்ஷய பாத்ரத்தைப் பெறுகிருர். அந்த பாத்ரம் எவ்வளவு பேர்களாலும் அவர்களுக்கு ஆஹாரமளிக்கின்றது. இவ்விதம் ஸூர்யனுடைய மஹிமை வர்ணிக்கப்படுகிறது.

ஸ்ரீமத் ராமாயணத்திலும் இராவணனுடன் யுத்தம் செய்து சோர்வடைந்திருக்கும் ஸமயத்தில் இராமபிரானுக்கு அகஸ்த்ய மஹர்ஷி ஸூர்ய பகவானின் அருள் உண்டாவதற்காக, ततो युद्ध परिश्रान्तं समरे चिन्तया स्थितम् । रावणं चाग्रतो दृष्ट्वा युद्धाय समुपस्थितम् ॥ என்ருரம்பித்து ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரத்தை உபதேசிக்கின்ருர்.

ஸ்ரீமத் பாகவதத்திலும் ஸத்ராஜித் என்பவர் ஸூர்ய பகவானை உபாஸித்து ஸ்யமந்தகம் என்ற மணியைப்பெற்ருர்.

அதன் பெருமை தினம் 8 பாரம் தங்கத்தை விளை விக்குமென்றும், துர்ப்பிக்ஷம் முதலியது ஏற்படாதென்றும் ப்ரஸித்தி பெற்றது.

மற்றும் பல புராணங்களில் ஸூர்ய பகவானைப்பற்றிய விசேஷங்கள் பலவாருகக் கூறப்படுகின்றன.

ஸ்கந்த புராணத்தில், आरोग्यं भास्करादिच्छेत् என்று ஸூர்யன் அருள் இருந்தால் வ்யாதிகள் அணுகா என்று கூறப்படுகிறது.

உபநிஷத்துக்களில் ஸூர்யனை ப்ரஹ்மமாக உபாஸனம் செய்யும்படியும் அவரே நற்கதியை அடைவிக்கின்ருரென்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் வர்ணிக்கப்படுகிற ஸூர்ய பகவானின் இரதம் முதல் ஶ்லோகத்தில் 10,000 யோஜனையுள்ளதென்றும், ஒரு சக்ரம், ஏழு சந்தஸ்ஸுக்களாகிய குதிரைகள் உள்ளதென்றும், மஹாமேரு பர்வதத்தைச் சுற்றிவருகிறதென்றும் கூறப்படுகிறது.

இரண்டாவது ஶ்லோகத்தில் ஸூர்ய மண்டலத்தில் உள்ள ஆதித்யன் முதலிய 7 தேவர்கள் ஒவ்வொரு மாதத்திலும் ஸூர்ய பகவானை உபாஸிக்கின்ருர்கள் என்று கூறப்படுகின்றது. மூன்ருவது ஶ்லோகத்தில் ஸூர்ய கிரணங்கள் ப்ராணிகளின் சரீரத்தில் நாடிகள் வழியாகப் ப்ரவேசித்து ஹ்ருதயத்தை வ்யாபித்திருக்கின்றன என்றும், கிரணங்கள் மூலம் பெருகும் அமிருதத்தை தேவர்கள், பித்ருக்கள், மனிதர்கள் பருகுகிருர்களென்றும், வெப்பம், மழை, பனி இவைகளைக் கொடுத்து ப்ராணிகளைக் காப்பாற்றுகின்றனவென்றும் கூறப்படுகின்றது.

நான்காவது ஶ்லோகத்தில் மேரு பர்வதத்தைச் சுற்றி வரும் ஸூர்யன் தான் ஓரிடத்தில் இருந்துகொண்டு கிர

ணங்களால் ஐந்து திசைகளை வியாபிக்கின்றார் என்றும் நக்ஷத்திரங்கள், க்ரஹங்கள் இவைகளுக்கு ப்ரகாசத்தைக் கொடுக்கின்றாரென்றும், ப்ரளய காலத்தில் ஏழு உருவத்துடன் உலகத்தை எரிக்கின்றாரென்றும் கூறப்படுகின்றது.

ஐந்தாவது ஶ்லோகம் 12 மாதங்களிலும், 12 பெயருடன் இருந்துகொண்டு தன் கிரணங்களால் உலகத்தை சுத்தி செய்கிறாரென்றும், அவ்விதம் சுத்திசெய்யாத மாதத்தில் (மலமாதம்) நற்காரியங்கள் செய்யக்கூடாதென்றும் கூறுகிறது.

ஆறு முதல் நான்கு ஶ்லோகங்களால் ஸூர்ய மண்டலத்தில் வஸிக்கும் ஸூர்ய பகவானை வேதங்கள், த்வாதசாதித்யர்கள், கந்தர்வர்கள் முதலியவர்கள் உபாஸிக்கின்றனர் என்றும், வ்யாஹ்ருதிகளால் ப்ரஹ்ம ரூபமாக உபாஸிக்கத் தகுந்தவரென்றும் கூறப்படுகின்றது.

பிறகு மூன்று ஶ்லோகங்களால் ஆதித்யாந்தர்யாமியான பரமேஶ்வரனுடைய மஹிமை கூறப்படுகின்றது. யாகங்களின் பயன் மிகுந்ததாக ஆவதற்கு உத்கீத பக்தியிலுள்ள ஓங்காரத்தில் அவரை உபாஸிக்கவேண்டுமென்றும், ப்ராஜாபத்ய க்ருச்ச்ரம் அனுஷ்டிக்கும் புருஷன் அவரை உபாஸிக்கும் முறையையும் கூறி, எல்லோருக்கும் ப்ரத்யக்ஷ தெய்வமென்றும், காயத்ரீ மந்த்ரத்திற்குப் பொருளாக விளங்குகிறாரென்றும் வர்ணிக்கப்படுகின்றது.

13, 14 ச்லோகங்களில் கீழ்ச்சொல்லிய விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்லி இந்த ஸ்தோத்ரத்தைப் படிப்பவர்களுக்குப் பயனும் கூறப்படுகின்றது.

இவ்விதம் இந்த ஸ்தோத்ரத்தில் ஸூர்ய பகவானைப் பற்றிய விவரங்களும், இதைப் பாராயணம் செய்பவர்

களுக்கு துஸ்ஸ்வப்நம், பயங்கர வ்யாதிகள், நவக்ரஹ தஶா புக்தி தோஷங்கள் விலகுகின்றனவென்றும் கூறப்பட்டுள்ளது. மற்றும் ஆதித்ய ஸ்தோத்ரம், ஆதித்ய கவசம் ஆதித்ய ஹ்ருதயம், ஸங்க்ராந்தி பூஜை, ஸூர்யாஷ்டோத்தர ஶதநாமாவளி, ஸ்த்ரீகள் செய்யும் ஸூர்ய நமஸ்கார பூஜை முதலியதும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிய க்ரந்தத்தைக் கொடுத்தும் இதை மொழி பெயற்கும் புத்தி சக்தியை அளித்தும் அனுக்ரஹித்த எனது ப்ரஹ்மவித்யாசார்யாளான போலகம் சாஸ்த்ர ரத்னகர P. S. ஸ்ரீராம சாஸ்திரிகள் அவர்களுக்கு நமஸ்கார பூர்வகமாக நன்றியை பலமுறை தெரிவிக்கிறேன்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ மதாசார்யாளின் ஆஜ்ஞையின்பேரில் எழுதப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை எல்லாரும் பாராயணம் செய்து க்ருதார்த்தர்களாக ஆகவேண்டுமாக ப்ரார்த்திக்கின்றேன்.

மாயூரம் M. ராமனாத தீக்ஷிதர்.

## நவக்ரஹங்கள்



ஸூர்யன்



சந்த்ரன்




குஜன்
(செவ்வாய்)

## நவக்ரஹங்கள்



புதன்



குரு
(வியாழன்)




சுக்ரன்
(வெள்ளி)



சனி



ராகு



கேது

श्रीः

## ॥ सूर्य कवचम् ॥

अस्य श्री सूर्यकवच महामन्त्रस्य – अगस्त्यो भगवान् ऋषिः – अनुष्टुप् छन्दः सूर्यो देवता – श्रीं बीजं – णीं शक्तिः – सूं कीलकम् – सूर्य-प्रसादसिद्ध्यर्थे जपे विनियोगः ।

## ஸௌர்ய கவசம்

அஸ்ய ஸ்ரீ ஸௌர்ய கவச மஹாமந்த்ரஸ்ய அகஸ்த்யோ பகவாந் ருஷி:- அநுஷ்டுப் சந்த:-ஸௌர்யோ தேவதா-ஸ்ரீம் பீஜம்-ணீம் ஶக்தி:-ஸௌம் கீலகம்-ஸௌர்ய ப்ரஸாத ஸித்த்யர்த்தே ஜபே விநியோக: ।

## ॥ ध्यानम् ॥

**த்யாநம்:—**

जपाकुसुमसंकाशं द्विभुजं पद्महस्तकम् ।
सिन्दूराम्बरमाल्यं च रक्तगन्धानुलेपनम् ॥

ஜபாகுஸுமஸங்காஶம் த்விபுஜம் பத்மஹஸ்தகம் ।
ஸிந்தூராம்பரமால்யஞ்ச ரக்தகந்தாநுலேபநம் ॥

माणिक्यरत्नखचितं सर्वाभरणभूषितम् ।
सप्ताश्वरथवाहं तु मेरुं चैव प्रदक्षिणम् ॥

மாணிக்யரத்நகசிதம் ஸர்வாபரணபூஷிதம் ।
ஸப்தாஶ்வரதவாஹம் து மேருஞ்சைவ ப்ரதக்ஷிணம் ॥

'कुर्वाणं' इति शेषः—

'குர்வாணம்' இதி ஶேஷ: ॥

देवासुरवरैर्वन्द्यं घृणिभिः परिवेष्टितम् ।
ध्यायेत् पठत् सुवर्णाभं सूर्यस्य कवचं मुदा ॥

*தேவாஸுரவரைர்வந்த்யம் க்ருணிபி:பரிவேஷ்டிதம் ।*
*த்யாயேத் படேத் ஸுவர்ணாபம் ஸூர்யஸ்ய கவசம் முதா ॥*

## ॥ अथ कवचम् ॥

*அத கவசம்:—*

घृणिः पातु शिरोदेशं सूर्यः पातु ललाटकम् ।
आदित्यो लोचने पातु श्रुतिं पातु दिवाकरः ॥

*க்ருணி: பாது ஶிரோதேஶம் ஸூர்ய: பாது லலாடகம் ।*
*ஆதித்யோ லோசநே பாது ஶ்ருதிம் பாது திவாகர: ॥*

घ्राणं पातु सदा भानुः मुखं पातु सदा रविः ।
जिह्वां पातु जगन्नेत्रः कण्ठं पातु विभावसुः ॥

*க்ராணம் பாது ஸதா பாநு: முகம் பாது ஸதா ரவி: ।*
*ஜிஹ்வாம் பாது ஜகந்நேத்ர: கண்டம் பாது விபாவஸு: ॥*

स्कन्धौ ग्रहपतिः पातु भुजौ पातु प्रभाकरः ।
करावब्जकरः पातु हृदयं पातु भानुमान् ॥

*ஸ்கந்தௌ க்ரஹபதி: பாது புஜௌ பாது ப்ரபாகர: ।*
*கரௌ அப்ஜகர: பாது ஹ்ருதயம் பாது பாநுமான் ॥*

मध्यं पातु सुसप्ताश्वो नाभिं पातु नभोमणिः ।
द्वादशात्मा कटिं पातु सविता पातु सक्थिनी ॥

மத்யம் பாது ஸுஸப்தாஶ்வ: நாபிம் பாது நபோமணி: |
த்வாதஶாத்மா கடிம் பாது ஸவிதா பாது ஸக்தினீ ||

ऊरू पातु सुरश्रेष्ठो जानुनी पातु भास्करः ।
जङ्घे मे पातु मार्ताण्डो गुल्फौ पातु त्विषां पतिः ॥

ஊரு பாது ஸுரஶ்ரேஷ்ட: ஜாநுநீ பாது பாஸ்கர: |
ஜங்கே மே பாது மார்தாண்ட: குல்பௌ பாது
த்விஷாம்பதி: ||

पादौ दिनमणिः पातु पातु मित्रोऽखिलं वपुः ।

பாதௌ திநமணி: பாது பாது மித்ரோகிலம் வபு: ||

## ॥ फलश्रुतिः ॥

आदित्यकवचं पुण्यं अभेद्यं वज्रसन्निभम् ।
संवत्सरमुपासित्वा साम्राज्यपदवीं लभेत् ।
सर्वरोगभयादिभ्यः मुच्यते नात्र संशयः ॥

**பலஶ்ருதி:**

ஆதித்யகவசம் புண்யம் அபேத்யம் வஜ்ரஸந்நிபம் |
ஸம்வத்ஸரமுபாஸித்வா ஸாம்ராஜ்யபதவீம் லபேத் |
ஸர்வரோகபயாதிப்ய: முச்யதே நாத்ர ஸம்ஶய: ||

## ॥ सूर्यस्तोत्रम् ॥

शुक्लाम्बर+शान्तये—ओं भूः—मम—प्रीत्यर्थम्—सूर्यस्तोत्र महा-मन्त्रजपं करिष्ये ॥

अस्य श्रीसूर्यस्तोत्रमहामन्त्रस्य—अगस्त्य ऋषिः—अनुष्टुप् छन्दः—सूर्यो देवता—सूं बीजं—यं शक्तिः—मं कीलकम्। मम सूर्यप्रसाद सिद्धयर्थे जपे विनियोगः ॥

1. आदित्याय अंगुष्ठाभ्यां नमः, 2. असुरारये तर्जनीभ्यां नमः, 3. दिवाकराय मध्यमाभ्यां नमः, 4. प्रभाकराय अनामिकाभ्यां नमः, 5. सहस्रकिरणाय कनिष्ठिकाभ्यां नमः, 6. मार्ताण्डाय करतल कर-पृष्ठाभ्यां नमः, आदि + य हृदयाय नमः, असुरा + ये शिरसे स्वाहा दिवा + शिखायै वषट्, प्रभा + कवचाय हुम्, सहस्रकिरणाय नेत्र-त्रयाय वौषट्, मार्ताण्डाय अस्त्राय फट्, भूर्भुवस्सुवरोमिति दिग्बन्धः।

## ஸூர்ய ஸ்தோத்ரம்

ஶுக்லாம்பர—ஶாந்தயே-ஓம் பூ:-மம-ப்ரீத்யர்த்-தம்-ஸூர்ய ஸ்தோத்ர மஹாமந்த்ரஜபம் கரிஷ்யே ॥

அஸ்ய ஶ்ரீ ஸூர்ய ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய அகஸ்த்ய: ருஷி:—அநுஷ்டுப் சந்த:-ஸூர்யோ தேவதா ஸூம் பீஜம்-யம் ஶக்தி:-மம் கீலகம் மம ஸூர்ய ப்ரஸாத ஸித்த்யர்த்தே ஜபே விநியோக: ।

1. ஆதித்யாய அங்குஷ்டாப்யாம் நம: । 2. அஸு-ராரயே தர்ஜநீப்யாம் நம: । 3. திவாகராய மத்யமாப்-யாம் நம: । 4. ப்ரபாகராய அநாமிகாப்யாம் நம: । 5. ஸஹஸ்ரகிரணாய கநிஷ்டிகாப்யாம் நம: । 6. மார்-

தாண்டாய கரதல கரப்ருஷ்டாப்யாம் நம: | ஆதித்யாய+ஹ்ருதயாய நம: | அஸூ+ஶிரஸே ஸ்வாஹா | திவா+ஶிகாயை வஷட் | ப்ரபா+கவசாய ஹூம் | ஸஹஸ்ரகிரணாய நேத்ரத்ரயாய வௌஷட் | மார்தாண்டாய அஸ்த்ராய பட் | பூர்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த: ||

## ।। ध्यानम् ।।

ध्यायेत्सूर्यमनन्तकोटिकिरणं तेजोमयं भास्करं
भक्तानामभयप्रदं दिनकरं ज्योतिर्मयं शंकरम् ।
आदित्यं जगदीशमच्युतमजं त्रैलोक्यचूडामणिं
भक्ताभीष्टवरप्रदं दिनमणिं मार्ताण्डमाद्यं शुभम् ।।

**த்யாநம்**

த்யாயேத் ஸூர்யமநந்த கோடிகிரணம்
தேஜோமயம் பாஸ்கரம்
பக்தாநாமபயப்ரதம் திநகரம்
ஜ்யோதிர்மயம் ஶங்கரம் |
ஆதித்யம் ஜகதீஶம் அச்யுதம் அஜம்
த்ரைலோக்ய சூடாமணிம்
பக்தாபீஷ்டவரப்ரதம் திநமணிம்
மார்தாண்டமாத்யம் ஶுபம் ||

लं पृथिव्यात्मने गन्धान् धारयामि – हं आकाशात्मने पुष्पाणि समर्पयामि – यं वाय्वात्मने धूपमाघ्रापयामि – रं वह्न्यात्मने दीपं दर्शयामि – वं अमृतात्मने अमृतं निवेदयामि – सं सर्वात्मने सर्वोपचारान् समर्पयामि ।

## ॥ सूर्यस्तोत्रम् ॥

शुक्लाम्बर+शान्तये–ओं भूः–मम–प्रीत्यर्थम्–सूर्यस्तोत्र महा-मन्त्रजपं करिष्ये ॥

अस्य श्रीसूर्यस्तोत्रमहामन्त्रस्य–अगस्त्य ऋषिः–अनुष्टुप् छन्दः–सूर्यो देवता–सूं बीजं–यं शक्तिः–मं कीलकम्। मम सूर्यप्रसाद सिद्ध्यर्थे जपे विनियोगः ॥

1. आदित्याय अंगुष्ठाभ्यां नमः, 2. असुरारये तर्जनीभ्यां नमः, 3. दिवाकराय मध्यमाभ्यां नमः, 4. प्रभाकराय अनामिकाभ्यां नमः, 5. सहस्रकिरणाय कनिष्ठिकाभ्यां नमः, 6. मार्ताण्डाय करतल कर-पृष्ठाभ्यां नमः, आदि+य हृदयाय नमः, असुरा+ये शिरसे स्वाहा दिवा+शिखायै वषट्, प्रभा+कवचाय हुम्, सहस्रकिरणाय नेत्र-त्रयाय वौषट्, मार्ताण्डाय अस्त्राय फट्, भूर्भुवस्सुवरोमिति दिग्बन्धः।

## ஸூர்ய ஸ்தோத்ரம்

ஶுக்லாம்பர—ஶாந்தயே-ஓம் பூ:-மம-ப்ரீத்யர்த்-தம்-ஸூர்ய ஸ்தோத்ர மஹாமந்த்ரஜபம் கரிஷ்யே ॥

அஸ்ய ஸ்ரீ ஸூர்ய ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய அகஸ்த்ய: ருஷி:-அநுஷ்டுப் சந்த:-ஸூர்யோ தேவதா ஸூம் பீஜம்-யம் ஶக்தி:-மம் கீலகம் மம ஸூர்ய ப்ரஸாத ஸித்த்யர்த்தே ஜபே விநியோக: ।

1. ஆதித்யாய அங்குஷ்டாப்யாம் நம: । 2. அஸு-ராரயே தர்ஜநீப்யாம் நம: । 3. திவாகராய மத்யமாப்-யாம் நம: । 4. ப்ரபாகராய அநாமிகாப்யாம் நம: । 5. ஸஹஸ்ரகிரணாய கநிஷ்டிகாப்யாம் நம: । 6. மார்-

தாண்டாய கரதல கரப்ருஷ்டாப்யாம் நம: | ஆதித்யாய+ஹ்ருதயாய நம: | அஸூ+ஶிரஸே ஸ்வாஹா | திவா+ஶிகாயை வஷட் | ப்ரபா+கவசாய ஹூம் | ஸஹஸ்ரகிரணாய நேத்ரத்ரயாய வௌஷட் | மார்தாண்டாய அஸ்த்ராய பட் | பூர்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த: ||

## ॥ ध्यानम् ॥

ध्यायेत्सूर्यमनन्तकोटिकिरणं तेजोमयं भास्करं
भक्तानामभयप्रदं दिनकरं ज्योतिर्मयं शंकरम् ।
आदित्यं जगदीशमच्युतमजं त्र्यैलोक्यचूडामणिं
भक्ताभीष्टवरप्रदं दिनमणिं मार्ताण्डमाद्यं शुभम् ॥

**த்யானம்**

த்யாயேத் ஸூர்யமனந்த கோடிகிரணம்
தேஜோமயம் பாஸ்கரம்
பக்தானாமபயப்ரதம் திநகரம்
ஜ்யோதிர்மயம் ஶங்கரம் |
ஆதித்யம் ஜகதீஶம் அச்யுதம் அஜம்
த்ரைலோக்ய சூடாமணிம்
பக்தாபீஷ்டவரப்ரதம் திநமணிம்
மார்தாண்டமாத்யம் ஶுபம் ||

लं पृथिव्यात्मने गन्धान् धारयामि — हं आकाशात्मने पुष्पाणि समर्पयामि — यं वाय्वात्मने धूपमाघ्रापयामि — रं वह्न्यात्मने दीपं दर्शयामि — वं अमृतात्मने अमृतं निवेदयामि — सं सर्वात्मने सर्वोपचारान् समर्पयामि ।

லம் ப்ருதிவ்யாத்மநே கந்தாந் தாரயாமி, ஹம் ஆகாஶாத்மநே புஷ்பாணி ஸமர்ப்பயாமி, யம் வாய்வாத்மநே தூபமாக்ராபயாமி, ரம் வஹ்ந்யாத்மநே தீபம் தர்ஶயாமி, வம் அம்ருதாத்மநே அம்ருதம் நிவேதயாமி, ஸம் ஸர்வாத்மனே ஸர்வோபசாராந் ஸமர்பயாமி ||

## || अथ स्तोत्रम् ||

அத ஸ்தோத்ரம்

कालात्मा सर्वभूतात्मा वेदात्मा विश्वतोमुखः ।
जन्ममृत्युजराव्याधिसंसारभयनाशनः ॥

காலாத்மா ஸர்வபூதாத்மா வேதாத்மா விஶ்வ தோமுக: |
ஜந்ம ம்ருத்யுஜராவ்யாதிஸம்ஸாரபயநாஶந: ||

ब्रह्मस्वरूप उदये मध्याह्ने तु महेश्वरः ।
अस्तमाने स्वयं विष्णुः त्रयीमूर्तिः दिवाकरः ॥

ப்ரஹ்மஸ்வரூப உதயே மத்யாஹ்நே து மஹேஶ்வர: |
அஸ்தமானே ஸ்வயம் விஷ்ணு: த்ரயீமூர்தி: திவாகர: ||

एकचक्ररथो यस्य दिव्यः कनकभूषितः ।
सोऽयं भवतु नः प्रीतः पद्महस्तो दिवाकरः ॥

ஏகசக்ரோ ரதோ யஸ்ய திவ்ய: கநகபூஷித: |
ஸோயம் பவது ந: ப்ரீத: பத்மஹஸ்தோ திவாகர: ||

पद्महस्त परंज्योतिः परेशाय नमोनमः ।
अण्डयोने महासाक्षिन् आदित्याय नमोनमः ॥

பத்மஹஸ்த பரஞ்ஜ்யோதிः பரேஶாய நமோநமः ।
அண்டயோநே மஹாஸாக்ஷிந் ஆதித்யாய நமோநமः ॥

कमलासन देवेश भानुमूर्ते नमोनमः ।
धर्ममूर्ते दयामूर्ते तत्त्वमूर्ते नमोनमः ॥

கமலாஸந தேவேஶ பாநுமூர்தே நமோநமः ।
தர்மமூர்தே தயாமூர்தே தத்வமூர்தே நமோநமः ॥

सकलेशाय सूर्याय क्षान्तेशाय नमोनमः ॥

ஸகலேஶாய ஸூர்யாய க்ஷாந்தேஶாய நமோநமः ॥

## ॥ फलश्रुतिः ॥

பலஶ்ருதிः

क्षयापस्मारगुल्मादि दुर्दोषव्याधिनाशनम् ।
सर्वज्वरहरं चैव कुक्षिरोग निवारणम् ॥

க்ஷயாபஸ்மராகுல்மாதிதுர்தோஷவ்யாதிநாஶநம் ।
ஸர்வஜ்வரஹரஞ்சைவ குக்ஷிரோகநிவாரணம் ॥

இந்த ஸூர்ய ஸ்தோத்ரத்தை ஜபிப்பவர்களுக்கு க்ஷயம், அபஸ்மாரம், குல்மம், (வயிற்று நோய்) மற்று முள்ள ஜ்வரம் முதலியன நிவர்த்தியடையும்.

एतत्स्तोत्रं शिवप्रोक्तं सर्वसिद्धिकरं परम् ।
सर्वसंपत्करं चैव सर्वाभीष्टप्रदायकम् ॥

ஏதத் ஸ்தோத்ரம் ஶிவப்ரோக்தம் ஸர்வஸித்தி
கரம் பரம் ।
ஸர்வஸம்பத்கரஞ்சைவ ஸர்வாபீஷ்ட ப்ரதாயகம் ॥

ஐச்வர்யத்தையும் மற்றுமுள்ள மனோரதங்களையும் கொடுக்கும் இந்த ஸ்தோத்ரம் ஸ்ரீ பரமசிவனால் சொல்லப்பட்டது.

---



ஸூர்ய பகவான்

श्री शिवाभ्यां नमः

# आदित्यस्तोत्ररत्नम्

श्रीमत् अप्पय्यदीक्षितविरचितम्

ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதரவர்கள் அருளிச்செய்த

# ஆதித்ய ஸ்தோத்ர ரத்னம்

आदित्यस्तोत्ररत्नस्य वृत्तीरत्नप्रकाशिका ।
अस्माभिरेव क्रियते नातिसंकोचविस्तरा ॥ १ ॥

"ஆதித்ய ஸ்தோத்ர ரத்னம் என்ற க்ரந்தத்திற்கு அதிகமாக சுருக்கமும் விஸ்தாரமுமில்லாமல் ரத்ன ப்ரகாசிகை என்ற வ்யாக்யானம் என்னால் செய்யப்படுகிறது."

முதல் ச்லோகத்தினால் ஸகல வேதஸ்வரூபியாயும் ப்ரத்யக்ஷதெய்வமாயும் இருளைப் போக்கி ஒளியைப் பரப்பி அருளைத்தருபவருமான ஸ்ரீஸூர்ய நாராயணமூர்த்தியின் காலஸ்வரூபமாய் விளங்கும் இரதத்தை வர்ணிக்கின்றார்.

विस्तारायाममानं दशभिरुपगतो योजनानां सहस्रैः
चक्रे पञ्चारनाभित्रितयवति लसन्नेमिषट्के निविष्टः ।
सप्तच्छन्दस्तुरङ्गाहितवहनधुरो हायनांशत्रिवर्ग-
व्यक्त्या क्लृप्ताखिलाङ्गः स्फुरतु मम पुरः स्यन्दनश्चण्डभानोः ॥१॥

“விஸ்தாராயாமமானம் தசபி
ருபகதோயோஜநாநாம் ஸஹஸ்ரை:
சக்ரே பஞ்சாரநாபித்ரிதயவதி
லஸன் நேமி ஷட்கே நிவிஷ்ட: |
ஸப்தச் சந்தஸ்துரங்காஹித
வஹநதுரோ ஹாயநாம்ச த்ரிவர்க
வ்யக்த்யா க்லுப்தாகிலாங்க: ஸ்புரது மம புர:
ஸ்யந்தனச் சண்ட பாநோ: || 1

ஸூர்யபகவானின் இரதம் பதினாயிரம் யோஜனை நீளமும் அகலமுமுள்ளது. ஒரு சக்ரமும் ஐந்து ஆரங்களும் *ஆறுவட்டங்களும் மூன்று மேகலையுடன் கூடிய ஒரு குடமும் ஏழு குதிரைகளுமுள்ளது. காயத்ரீ, உஷ்ணிக், அனுஷ்டுப், ப்ருஹதீ, பங்தீ, த்ரிஷ்டுப், ஜகதீ என்ற ஏழு சந்தஸ்ஸுக்களும், 7 குதிரைகளாக அமைந்தன. “सप्तत्वा हरितोरथे वहन्ति देवसूर्य” என்ற மந்திரம் இதை விளக்குகிறது.

இந்த இரதத்திற்கு சக்ரம் முதலிய அவயவங்களாக வருஷத்தின் அவயவங்களான பகல் இரவு கலை காஷ்டை முஹூர்த்தம் முதலியவைகளும், தர்மம் அர்த்தம் காமம் என்ற த்ரிவர்கமும் அமைந்துள்ளது. அதாவது பகல் சக்ரத்தின் நடுவிலுள்ள மூன்று மேகலையுடன் கூடிய குடம், ஐந்து ருதுக்களும் ஹேமந்த சிசிர ருதுக்களை ஒன்றாகக் கருதி, அல்லது மத்ஸ்ய புராணத்தின்படி ஸம்வத்ஸரம், பரிவத்ஸரம், உத்வத்ஸரம், அனுவத்ஸரம்,

---

* வண்டி சக்ரத்தின் குடத்திலும் வட்டத்திலும் கோர்க்கப்பட்ட கட்டைகள்.

வத்ஸரம் என்ற ஐந்தும் இரதத்தின் ஐந்து அரங்கள். வஸந்தம் முதலிய ஆறு ருதுக்களும் ஆறு வட்டங்கள். வருஷம் இரதத்தின் நடுவில் யஜமானன் உட்காருமிடம், இதற்கு नीडम् - (நீடம்) என்று பெயர். தக்ஷிணாயனம் உத்தராயணம் இரண்டும் குதிரையை தேரில் கட்டுவதற்காக இருபக்கங்களிலும் கோர்க்கப்பட்ட கட்டைகள். இதற்கு कूबरम् (கூபரம்) என்று பெயர். முஹூர்த்தங்கள் கட்டையையும் தோல்களையும் சேர்க்கும் இரும்புக் கீல்கள். இதற்கு – बन्धनम् (பந்தனம்) என்று பெயர். கலைகள் நுகத்தடியின் கீல்கள். இதற்கு, शम्या (சம்யா) என்று பெயர். காஷ்டைகள் இரதத்தின் முன் பாகத்தில் நுணி நீண்டதாகவும் கூர்மையாகவும் போடப்பட்ட கட்டை. இதற்கு घोणा (கோணா) என்று பெயர். க்ஷணங்கள் அச்சு, நிமிஷங்கள் இரதத்தின் அடிபாகத்தில் நீளமாய்ப் போடப்பட்ட கட்டை, இதற்கு अनुकर्षः (அநுகர்ஷம்) என்று பெயர். லவங்கள் நுகத்தடிக்கும் தேர்த் தட்டிற்குமுள்ள கட்டை, இதற்கு ईषा (ஈஷா) என்று பெயர். இரவு யஜமானனைக்காப்பதற்காக எதிரில் வைக்கப்பட்ட ஒரு கட்டை. இதற்கு वरूथः (வரூதம்) என்று பெயர். தர்மம் கொடி மரம், ध्वजः என்று பெயர். அர்த்தம் காமம் இரண்டும் நுகத்தடிக்கும் அச்சுக்கும் கோடி பாகங்கள்.

நிமேஷம் என்பது இமை கொட்டும் நேரம். அதில் பாதி பாகம் லவம். அதில் கால் பாகம் க்ஷணம். 18 நிமேஷங்கள். கொண்டது ஒரு காஷ்டை. 30 காஷ்டைகள் கொண்டது ஒரு

முஹூர்த்தம், இரண்டு நாழிகைகள், இவ்விதம் அவயவங்களைத் தெரிந்து கொண்டு த்யானம் செய்தால் விசேஷ பலனுண்டு. இவ்விதம் அமைந்துள்ள ஸூர்ய பகவானின் இரதம் என் எதிரில் தோன்றட்டும்—என்று அர்த்தம். இவ்விதம் இரதத்தின் அமைப்பைப்பற்றிக் கூறினோம். இனிமேல் இந்த இரதம் சுற்றிவரும் வழியைப்பற்றி புராணங்களிலுள்ளதை விவரிப்போம்.

ஐம்பது கோடியோஜனை விஸ்தாரமுள்ள பூகோளத்தின் நடுவில் லக்ஷம் யோஜனை விஸ்தாரமுள்ளது ஜம்பூ த்வீபம். இது உப்புஸமுத்திரத்தினால் சூழப்பட்டும் மஹாமேருபர்வதத்தினால் தாங்கப்பட்டுமிருக்கிறது. மஹாமேரு பர்வதம் 16000 யோஜனை அடிபாகமும் 32000 யோஜனை சிகரத்தின் விஸ்தாரமும் 84000, யோஜனை உயரமுமுள்ளது. தாமரை புஷ்பம் போல் அமைந்திருக்கும் பூமண்டலத்திற்கு கர்ணிகை போல் அமைந்துள்ளது. தங்கமயமானது. உப்பு ஸமுத்ரத்தைக் காட்டிலும் இருமடங்கு விஸ்தாரமுள்ள ப்லக்ஷத்வீபம் அந்த உப்பு ஸமுத்ரத்தைச் சூழ்ந்திருக்கிறது. அதைச் சூழ்ந்துள்ளது கரும்புஸமுத்ரம். அதைக் சூழந்துள்ளது சால்மலித்வீபம். அதைச் சூழ்ந்துள்ளது ஸுராமயமான ஸமுத்ரம். இவ்விதம் இருமடங்கு விஸ்தாரமுள்ள நெய், தயிர், பால், சுத்தஜலமயமான ஸமுத்ரங்களால் சூழப்பட்டுள்ள குச, க்ரௌஞ்ச, சாக, புஷ்கர, த்வீபங்கள் இருக்கின்றன. புஷ்கரத்வீபத்தின் நடுவில் 50,000, யோஜனை உயரமுள்ள சக்ராகாரமான மானஸோத்தரம் என்று ஒரு

பர்வதம் இருக்கிறது. அதன் சிகரத்தின் மேல் 50,000, யோஜனை தூரத்தில் ஸூர்யரதத்தின் சக்ரம் இருக்கிறது. அந்த சக்ரத்தின் நடுவில் கோர்க்கப் பட்ட அச்சுக்கட்டை ஜம்பூத்வீபத்தின் நடுவிலுள்ள மஹா மேரு பர்வதத்தின்மீது 16000, யோஜனை தூரம் கடந்து ஸஞ்சரிக்கின்ற வாயுஸ்கந்தத்தினுல் பிடிக்கப்பட்டு $1\frac{1}{2}$ கோடியே ஏழுலக்ஷம் யோஜனை தூரம் நீள முள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த அச்சுக் கட்டையில் இரதம் இருக்கிறது. இது த்ருவமண்டலத்திலுள்ள வாயுவினுல் இழுக்கப் பட்டுவருகிறது. இவ்விதம் மானஸோத்தர பர்வ தத்தின் மீதுள்ள இரதமானது ஏழு குதிரைகள் பூட்டப்பட்டு எண்ணெயாடும் செக்கு ஒரு சக்ரத் துடன் இழுக்கப்படுவது போல் இழுக்கப்படு கின்றது. இந்த இரதத்தின் மீது ஸூர்ய பகவான் இருந்துகொண்டு மஹாமேரு பர்வதத்தைச் சுற்றி வருகின்றுர்.

ச்லோகத்தில் சக்ரத்தின் மீது ரதமிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனுல் ரதம் அச்சு மரத்தில் தான் இருக்கிறது. அப்படியானுலும் சக்ரத்தி லுள்ள அச்சிலிருப்பதால் சக்ரத்திலிருப்பதாகக் கூறுவது பொருந்தும் என்று அபிப்ராயம். 1

ஸூர்ய மண்டலத்தின் மஹிமையைப் பற்றி இந்த ச்லோகத்தில் வர்ணிக்கின்றுர்.

आदित्यै रप्सरोभिः मुनिभिरहिवरैः ग्रामणीयातुधानैः
गन्धर्वैर्वालखिल्यैः परिवृतदशमांशस्य कृत्स्नं रथस्य ।

मध्यं व्याप्याधितिष्ठन् मणिरिव नभसो मण्डलश्चण्डरश्मेः
ब्रह्मज्योतिर्विवर्तः श्रुतिनिकरघनीभावरूपस्समिन्धे ॥ २ ॥

ஆதித்யை ரப்ஸரோபி: முனிபி:
அஹிவரை: க்ராமணீ யாதுதானை:
கந்தர்வைர்வாலகில்யை: பரிவ்ருத
தமாம்ஸ்ய க்ருத்ஸ்னம் ரதஸ்ய |
மத்யம் வ்யாப்யாதிதிஷ்டன்
மணிரிவ நபஸோ மண்டலம் சண்டரச்மே:
ப்ரஹ்மஜ்யோதிர்விவர்த்த: ச்ருதி நிகர
கனீபாவருபஸ் ஸமிந்தே ‖ 2

ஆதித்யர்கள். அப்ரஸ்ஸுக்கள், ரிஷிகள், ஸர்ப்பங்கள், க்ராமணீக்கள்,* இராக்ஷஸர்கள், கந்தர்வர்கள் இந்த ஏழு கணங்கள் ஸூர்யனுடைய பரிவார தேவதைகள். ஒவ்வொரு கணத்திலும் 12 பேர்களிருக்கிறார்கள். இவர்கள் சித்திரை முதலிய மாதங்களுக்கு அதிதேவதைகள். இவர்கள் ஒவ்வொரு மாதங்களிலும் ஏழு பேர் சேர்ந்த கணங்களாக ஸூர்ய மண்டலத்தைச் சுற்றிலுமிருந்து கொண்டு மத்தியிலுள்ள ஸூர்யபகவானையுபாஸித்து வருகிறார்கள். வாலகில்யர்கள் என்று 10 லக்ஷம் பேர்களை பார்வதீ விவாக ஸமயத்தில் ப்ரஹ்மதேவன் தன் தேஜஸ்ஸினால் அக்னியில் உண்டாக்கினார். இவர்கள் கட்டவிரல் அளவுள்ளவர்கள். ஸூர்ய கிரணங்களைப் பானம் செய்துகொண்டு ஸூர்யன்

---

* தேவர்களில் சிலர்.

போன்ற ஒளியுடன் ஸூர்யனைச் சுற்றிவருகிறார்கள். இந்த வாலகில்யர்களும் முன் சொல்லிய 12 கணங்களும் பதினாயிரம் யோஜனையுள்ள ஸூர்ய ரதத்தைச் சுற்றிலும் ஆயிரம் யோஜனை விஸ்தாரத்தை வ்யாபித்துக் கொண்டு ஸூர்ய பகவானை உபாஸித்து வருகிறார்கள். மிச்சமுள்ள ஒன்பதுனாயிரம் யோஜனை விஸ்தாரமுள்ள நடு பாகத்தை ஸூர்ய மண்டலம் வ்யாபித்து வருகிறது. இதைப்பற்றி பின் ச்லோகத்தில் விவரிக்கப் போகின்றோம். இவ்வளவு விஸ்தாரமுள்ள ஸூர்ய மண்டலம் நமது பார்வைக்கு மிகச் சிறியதாகக் காணப்படுகிறது. எப்படி உயர்ந்த மலையின் சிகரத்திலிருந்து பார்த்தால் பூமியிலுள்ள பெரிய கோபுரங்கூட சிறியதாகக் காணப்படுகிறதோ, அவ்விதம் அளவு கடந்த ஆகாயத்தில் வெகு தூரத்திற்கு அப்பால் செல்லுகின்ற ரதம் மிகச் சிறியதாகக் காணப்படுகிறது. இதை ச்லோகத்தில் '**मणिरिव नभसः**' என்று ஆகாயத்திற்கு மணிபோல் விளங்குகின்றதென்று வர்ணிக்கின்றார். வேதங்களின் ஸ்வரூபமாயமைந்துள்ள இந்த மண்டலம் உலகத்திற்குக் காரணமான பரப்ரஹ்மத்தின் ப்ரகாசத்தால் விளங்குகிறது. இவ்விதம் **एषा त्रय्येव विद्या तपति, येन सूर्यस्तपति तेजसेद्धः, त्रयीमयाय त्रिगुणात्मधारिणे, तमेव भान्तमनुभाति सर्वं** என்ற ச்ருதிகளும் ஸ்ம்ருதிகளும் கூறுகின்றன.

சைத்ரம் முதலிய மாதங்களுக்கு அதிகாரியாயுள்ள தேவகணங்கள்:—

| மாதம் | ஆதித்யன் 1 | முனிவர் 2 | ஸர்ப்பம் 3 | கந்தர்வர் 4 | அப்ஸரஸ் 5 | க்ராமணீ 6 | இராக்ஷஸன் 7 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. चैत्रम्<br>சைத்ரம் | धाता<br>தாதா | पुलस्त्यः<br>புலஸ்த்யர் | वासुकिः<br>வாஸுகி | तुम्बुरुः<br>தும்புரு | कृतस्थला<br>க்ருதஸ்தலா | रथकृत्*<br>ரதக்ருத் | रक्षोहेतिः<br>ரக்ஷோஹேதி |
| 2. वैशाखम्<br>வைசாகம் | अर्यमा<br>அர்யமா | पुलहः<br>புலஹர் | कङ्करीकः<br>கங்கரீகன் | नारदः<br>நாரதர் | पुञ्जकस्थला<br>புஞ்சகஸ்தலா | रथौजाः<br>ரதௌஜஸ் | प्रहेतिः<br>ப்ரஹேதி |
| 3. ज्येष्ठम्<br>ஜ்யேஷ்டம் | मित्रः<br>மித்ரன் | अत्रि<br>அத்ரி | तक्षकः<br>தக்ஷகன் | हाहाः<br>ஹாஹா | मेनका<br>மேனகா | रथस्वनः<br>ரதஸ்வனன் | पौरुषेयः<br>பௌருஷேயன் |
| 4. आषाढम्<br>ஆஷாடம் | वरुणः<br>வருணன் | वसिष्ठः<br>வஸிஷ்டர் | नागः<br>நாகன் | हूहूः<br>ஹூஹூ | सहजन्या<br>ஸஹஜன்யா | रथमित्रः<br>ரதமித்ரன் | वधः<br>வதன் |
| 5. श्रावणम्<br>ச்ராவணம் | इन्द्रः<br>இந்திரன் | अङ्गिराः<br>அங்கிரஸ் | एलापुत्रः<br>ஏலாபுத்ரன் | विश्वावसुः<br>விச்வாவஸு | प्रम्लोचन्ती<br>ப்ரம்லோசந்தீ | स्रोतः<br>ஸ்ரோதஸ் | सर्पः<br>ஸர்பன் |
| 6. भाद्रपदम्<br>பாத்ரபதம் | विवस्वान्<br>விவஸ்வான் | भृगुः<br>ப்ருகு | शंखपालः<br>சங்கபாலன் | उग्रसेनः<br>உக்ரஸேனன் | निम्लोचन्ती<br>நிம்லோசந்தீ | अरुणः<br>அருணன் | व्याघ्रः<br>வ்யாக்ரன் |

* रथगृत्सः - என்று வேதத்தில் இருக்கிறது.

| மாதம் | ஆதித்யன் 1 | முனிவர் 2 | ஸர்ப்பம் 3 | கந்தர்வர் 4 | அப்ஸரஸ் 5 | க்ராமணீ 6 | இராக்ஷஸன் 7 |
|---|---|---|---|---|---|---|---|
| 7. आश्विनम्<br>ஆஶ்வினம் | पर्जन्यः<br>பர்ஜன்யன் | भरद्वाजः<br>பரத்வாஜன் | ऐरावतः<br>ஐராவதன் | सर्वावसुः<br>ஸர்வாவஸூ | विश्वाची<br>விச்வாசீ | सेनजित्<br>ஸேனஜித் | आपः<br>ஆப: |
| 8. कार्तिकम्<br>கார்திகம் | पूषा<br>பூஷா | गौतमः<br>கௌதமன் | धनञ्जयः<br>தனஞ்ஜயன் | वसुरुचिः<br>வஸூருசி | घृताची<br>க்ருதாசீ | सुषेणः<br>ஸூஷேணன் | वायुः<br>வாயு |
| 9. मार्गशीर्षम्<br>மார்கசீர்ஷம் | अंशुः<br>அம்ஶூ | काश्यपः<br>காச்யபன் | महापद्मः<br>மஹாபத்மன் | चित्रसेनः<br>சித்ரஸேனன் | ऊर्वशी<br>ஊர்வசி | तार्क्ष्यः<br>தார்க்ஷ்யன் | विद्युत्<br>வித்யுத் |
| 10. पौषम्<br>பௌஷம் | गभस्तिमान्<br>கபஸ்திமான் | क्रतुः<br>க்ரது | कार्कोटकः<br>கார்கோடகன் | ऊर्णायुः<br>ஊர்ணாயு | पूर्वचित्तिः<br>பூர்வசித்தி | अरिष्टनेमिः<br>அரிஷ்டநேமி | सूर्यः<br>ஸூர்யன் |
| 11. माघम्<br>மாகம் | त्वष्टा<br>த்வஷ்டா | जमदग्निः<br>ஜமதக்னி | कम्बलः<br>கம்பலன் | धृतराष्ट्रः<br>த்ருதராஷ்ட்ரன் | तिलोत्तमा<br>திலோத்தமா | रथजित्<br>ரதஜித் | ब्रह्मोपेतः<br>ப்ருஹ்மோபேதன் |
| 12. फाल्गुनम्<br>பால்குனம் | विष्णुः<br>விஷ்ணு | विश्वामित्रः<br>விச்வாமித்ரன் | अश्वतरः<br>அச்வதரன் | सूर्यवर्चाः<br>ஸூர்யவர்ச்சஸ் | रम्भा<br>ரம்பா | सत्यजित्<br>ஸத்யஜித் | यज्ञोपेतः<br>யஜ்ஞோபேதன் |

இவ்விதம் ஏழு தேவதைகள் சேர்ந்த ஒவ்வொரு கணமும் சைத்ரம் முதலிய 12 மாதங்களுக்கு அதி தேவதைகளாகவும், இரண்டு கணங்கள் வஸந்தம் முதலிய 6 ருதுக்களுக்கு அதிகாரிகளாகவும் இருக்கிருர்கள். இவர்கள் பெயரைச் சொன்ஞல் பாபங்கள் விலகுமென்று புராணங்கள் கூறுகின்றன. 2

இந்த ச்லோகத்தில் ஸூர்யமண்டலத்திலிருந்து வெளிவரும் ஆயிரக்கணக்கான கிரணங்களின் மஹிமையைப் பற்றி துதிக்கின்ருர்.

निर्गच्छन्तोऽर्कबिम्बान्निखिलजनिमतां हार्दनाडीप्रविष्टाः
नाड्यो वस्वादि बृन्दारकगणमधुनस्तस्य नानादिगुत्थाः ।
वर्षन्तःस्तोकमुष्णं तुहिनमपि जलान्यापिबन्तस्समन्तात्
पित्रादीनां स्वधौषध्यमृतरसकृतो भान्ति कान्तिप्ररोहाः ॥ ३ ॥

நிர்கச்சந்தோர்கபிம்பாத் நிகில
ஜநிமதாம் ஹார்தநாடீப்ரவிஷ்டா:
நாட்யோ வஸ்வாதி ப்ருந்தாரககண மதுந:
தஸ்ய நாநாதிகுத்தா: |
வர்ஷந்த: ஸ்தோக முஷ்ணம் துஹிநமபி
ஜலாந்யாபிபந்தஸ் ஸமந்தாத்
பித்ராதீனும் ஸ்வதௌஷத்யம்ருதரஸக்ருதோ
பாந்தி காந்தி ப்ரரோஹா: || 3

ஸூர்ய மண்டலத்திலிருந்து வெளிவரும் கிரணங்கள் பிராணிகளின் தலையிலுள்ள ப்ரஹ்ம ரந்த்ரத்தின் வழியாக ஹ்ருதய நாடிகளை யடைகின்றன. இதைப் பற்றி சாந்தோக்யோபநிஷத்தில் தஹர வித்யையைச் சொல்லுமிடத்தில் நன்கு

கூறப்படுகிறது. அதாவது ஸூர்யனிடமிருந்து வரும் கிரணங்கள், எவ்விதம் ஒரு க்ராமத்திற்கும் வெகு தூரமுள்ள மற்றொரு க்ராமத்திற்கும் நடுவில் நீளமாயுள்ள ரஸ்தாவானது இரு கிராமங்களையும் அடைகிறதோ, அதே மாதிரி ஸூர்ய மண்டலத்திலிருந்து வெகு தூரம் கடந்துள்ள பூமியிலிருக்கும் பிராணிகளின் ஹ்ருதய நாடிகளை வ்யாபிக்கின்றன. இவ்விதம் அறிந்து உபாஸிப்பவன் ஹ்ருதயத்திலுள்ள அனேக நாடிகளில் ப்ரதானமான 101 நாடிகளுக்குள் ப்ருஹ்மரந்த்ரம் வரை செல்லும் ஸுஷும்னா நாடியின் வழியாக ஸூர்ய மண்டலத்தை க்ஷண நேரத்திலடைந்து அதன் வழியாக ப்ரஹ்ம லோகம் போகிறான். ப்ரஹ்ம லோகத்திலிருந்து ப்ரஹ்மாவின் அனுக்ரஹத்தால் ஞானமடைந்து மோக்ஷமடைகிறான். மறுபடி திரும்புவதில்லை. இவ்விதமறியாதவன் மற்றுமுள்ள பல நாடிகளின் வழியாகச் சென்று பலவிதமான கர்மகதிகளை யடைகிறான். ப்ரச்னோபநிஷத்தில் ஹ்ருதயத்திலிருந்து ப்ரதானமாக 101 நாடிகளும் அதற்கு கிளையாக ஒவ்வொன்றுக்கும் 100, மறுபடி அதன் கிளையாக 72000 நாடிகளும் இருப்பதாகக் கூறியிருக்கிறது.

மேலும் வஸ்வாதி தேவகணங்கள் ஸூர்ய மண்டலத்திலிருந்து நாற் புறங்களிலும் பரவும் கிரணங்களை தேன்போல் ஆஸ்வாதனம் செய்கிறார்கள். சாந்தோக்யோபநிஷத் மூன்றாவது அத்யாயம் மதுவித்யையைப் பற்றிச் சொல்லுமிடத்தில் இது நன்கு விளங்குகிறது.

நம்மால் காணப்படும் ஸூர்ய மண்டலம் தேவர்கள் ஸேவிக்கும் தேன், அந்தரிக்ஷ லோகம் தேனடை. ஸ்வர்கலோகம் தேனடைவைக்கும் கம்பு. அந்தரிக்ஷ லோகம் ஸ்வர்கத்திற்கு கீழே இருப்ப தால் கம்பில் தேனடை தொங்குவது போல் இருக் கிறது. அதன் நடுவில் ஸூர்ய மண்டலம் தேன் போலிருக்கிறது. தேனடையில் தேனீக்கள் புஷ்பங் களிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக தேன் சொட்டுக்களைக் கொண்டுவருவது போல், ருக்வேத மந்த்ரங்களாகிய தேனீக்கள், ருக்வேதத்தினுல் செய்யக்கூடிய கர்மாக்களாகிய புஷ்பங்களிலிருந்து, கர்மபலமாகிய தேன்களை, கர்மாக்களை யனுஷ் டிக்கும் யஜமானன் வஸ்வாதி தேவர்களாகி பருகு வதற்காக, ஸூர்ய மண்டலத்தில் சேர்த்து வைக் கின்றன. இதே மாதிரி யஜுர் வேத மந்த்ரங்கள். ஸாம வேத மந்த்ரங்கள், அதர்வ வேத மந்த்ரங்கள், அந்தந்த வேதங்களினுல் செய்யப்பட்ட கர்மாக் களின் பலனை தேன்களை ஸூர்ய மண்டலத்தில் சேர்த்து வைக்கின்றன. தேனீக்கள் புஷபங்களின் ஸாரமான பாகத்தைக் கசக்கி ரஸமான தேனைக் கொண்டுவருவது போல் மந்திரங்கள் கர்மாக்களில் விநியோகப்பட்டு பயனையளிக்கும் யோக்யதையை யுண்டுபண்ணுகின்றன. கர்மபலன் தேன் போல் அனுபவிப்பதற்கு இனிமையாக இருக்கிறபடியால் தேனுகக் கூறப்படுகிறது.

ஸூர்ய மண்டலத்திலிருந்து கிழக்கு நோக்கி வரும் கிரணங்களை வஸுக்கள் ஸேவிக்கிருர்கள், தெற்கு நோக்கி வரும் கிர்ணங்களை ருத்ரர்களும்,

மேற்கு நோக்கி வருபவைகளை ஆதித்யர்களும், வடக்கு நோக்கி வருபவைகளை மருத்துக்களும், மேல் நோக்கிச் செல்லுபவைகளை ஸாத்யர்களும் ஸேவிக்கிறார்கள்.

மேலும் ஸூர்ய மண்டலத்தில் ஆயிரம் கிரணங்கள் ப்ரதானமாக விளங்குகின்றன. அதில் சைத்ரம் முதலிய 4 மாதங்களில் 300 கிரணங்கள் சுக்ரம் என்ற பெயருடன் தாபத்தைக் கொடுக்கின்றன. ஶ்ராவணம் முதலிய 4 மாதங்களில் 400 கிரணங்கள் அம்ருதம் என்ற பெயருடன் ஜலத்தைக் கொடுக்கின்றன. பிறகு மார்கஶீர்ஷம் முதலிய 4 மாதங்களில் 300 கிரணங்கள் பனியைக் கொடுக்கின்றன. இந்த ஆயிரம் கிரணங்களும் சேர்ந்து கோடை காலத்தில் ஸமுத்ரம், நதிகள், குளம், குட்டை முதலிய இடங்களிலிருந்து ஜலத்தைக் குடிக்கின்றன. இந்த கிரணங்களே பித்ருக்களுக்கு ஸ்வதா ரூபமாகவும், மனிதர்களுக்கு ஓஷதிகளின் ரஸரூப மாகவும், தேவர்களுக்கு அம்ருத ரூபமாகவும், இருந்து திருப்தி பண்ணிவைக்கின்றன. இவ்விதம் ஸூர்ய கிரணங்கள் இருளைப் போக்குவது மட்டுமில்லாமல் எல்லாப் பிராணிகளுக்கும் ஜீவன ஸாதனங்களாயுமிருக்கின்றன. 3

"இவ்விதம் வர்ணிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கிரணங்களில் ஸுஷும்ன முதலிய ஏழு கிரணங்கள், நவக்ரஹங்கள், நக்ஷத்ரங்கள் இவைகளுக்கு ப்ரகாசத்தைக் கொடுக்கின்றன. இவைகளே ப்ரளய காலத்தில் ஏழு ஸூர்யர்களாக இருந்து கொண்டு மூன்று உலகங்களையும்

எறிக்கின்றன என்பதை இந்த ஶ்லோகத்தில் விளக்குகிறார்.

**अष्टास्तेषां सहस्रं त्रिदिववसुधयोः पञ्चदिग्व्याप्तिभाजां**
**शुभ्रांशुं तारकौघं शशितनयमुखान् पञ्च चोद्भासयन्तः ।**
**आरोगभ्राजमुख्यास्त्रिभुवनदहने सप्तसूर्या भवन्तः**
**सर्वान्व्याधीन् सुषुम्नाप्रभृतय इह मे सूर्यपादाः क्षिपन्तु ॥ ४ ॥**

"ஶ்ரேஷ்டாஸ் தேஷாம் ஸஹஸ்ரம் த்ரிதிவ
வஸுதயோ: பஞ்ச திக் வ்யாப்தி பாஜாம்
சுப்ராம்சும் தாரகௌகம் சசிதநய
முகான் பஞ்ச சோத் பாஸயந்த: |
ஆரோகப்ராஜமுக்யா ஸ்த்ரிபுவன தஹனே
ஸப்த ஸூர்யா பவந்த:
ஸர்வான் வ்யாதீன் ஸுஷும்ணு ப்ரப்ருதய
இஹ மே ஸூர்ய பாதா: க்ஷிபந்து ‖ 4

ஸூர்ய பகவான் மஹா மேரு பர்வதத்தைச் சுற்றிவரும் பொழுது முன் சொல்லிய கிரணங்கள் ஐந்து திக்குகளை வ்யாபிக்கின்றன. அதாவது முதல் ஶ்லோகத்தில் கூறியபடி மானஸோத்தர பர்வதத்தின் மீது கிழக்கு முதலான நான்கு திசைகளில் தேவேந்திரன் முதலிய நான்கு திக்பாலர்களின் பட்டணங்கள் இருக்கின்றன. அதில் இந்த்ர பட்டணமான அமராவதி கிழக்கு திக்கிலுள்ளது. யமனின் பட்டணமான ஸம்யமினீ தெற்கிலுள்ளது. வருணனின் பட்டணமான ஸுகா மேற்கு திக்கிலுள்ளது. ஸோமனின் பட்டணமான விபா வடக்கு திக்கிலுள்ளது. ஸூர்யன் அமராவதியில் இருக்கும் பொழுது ஆங்குள்ளவர்களுக்கு மத்யாஹ்னம்.

ஸம்யமனீயில் இருப்பவர்களுக்கு உதயம். விபா என்ற பட்டணத்திலுள்ளவர்களுக்கு அஸ்தமய காலம். ஈசானதிக்கிலுள்ளவர்களுக்கு பகல் மூன்ரூவது யாமம். அக்னி திக்கிலுள்ளவர்களுக்கு முதல் யாமம். இவ்விதம் ஒரே இடத்திலிருந்து கொண்டு ஐந்து திசைகளை வ்யாபிக்கின்ருர்.

ஸூர்ய கிரணங்களில் ப்ரதானமாயுள்ளது ஏழு கிரணங்கள், அவை. 1. ஸுஷும்ணு, 2. ஹரிகேச: 3. விச்வகர்மா, 4. விச்வ வ்யசா; 5. ஸம்யத்வஸு: 6. அர்வாக்வஸு: 7. ஸ்வராட். என்று வேதப்ரஸித்தமான பெயருள்ளவை. அதில் ஸுஷும்ணு என்ற கிரணம் சுக்ல பக்ஷத்தில் ஒவ்வொரு நாளும் ப்ரகாசத்தைக் கொடுத்து சந்திரனை பூர்ணிமையன்று 16 கலையுடன் பிரகாசிக்கச் செய்கிறது. இவ்விதம் ப்ரகாசிக்கும் அம்ருதமயமான சந்திரனை க்ருஷ்ண பக்ஷத்தில் தேவர்கள் ஒவ்வொரு கலையாகப் பருகுகிருர்கள். அமாவாஸ்யையன்று 1 கலை மட்டும் மிச்சமாகிறது. இவ்விதம் தேவர்களுக்கு ஆஹாரமளிக்கிறது. பூமியில் ஓஷதிகளில் ப்ரவேசித்து மனிதர்களுக்கும் ஆஹாரமளிக்கிறது. ஜலமாகப் பொழிந்து மரம், செடி, கொடி, பக்ஷி, மிருகம் இவைகளுக்கும் ஆஹாகாரமளிக்கின்றது. ஸ்வதாரூபமாக பித்ருக்களுக்கும் ஆஹகாரமளிக்கின்றது.

ஹரிகேசம்* என்ற கிரணம் அஸ்வினி முதலிய நக்ஷத்ரங்களுக்கு ப்ரகாசத்தைக் கொடுக்கின்றது. விஸ்வகர்மா என்ற கிரணம் தெற்கே இருந்து

* இந்த கிரணங்களைப் பற்றி தைத்திரீய ஸம்ஹிதை-கா-4-ப்ர-4-அனு-3-ல் கூறப்பட்டிருக்கிறது.

கொண்டு புதக்ரஹத்திற்கு ப்ரகாசத்தைக் கொடுக்கின்றது. விச்வவ்யசா: என்ற கிரணம் மேற்கே இருந்து கொண்டு சுக்ர க்ரஹத்திற்கு ப்ரகாசத்தைக் கொடுக்கிறது. இவ்விதம் ஸம்யத்வஸு என்ற கிரணம் அங்காரக க்ரஹத்திற்கும், அர்வாக்வஸு என்ற கிரணம் குரு க்ரஹத்திற்கும், ஸ்வராட் என்ற கிரணம் ஶனைஶ்சரக்ரஹத்திற்கும் ப்ரகாசத்தைக் கொடுக்கின்றது.

மேலும் இவைகளே ப்ரளயகாலத்தில் आरोगः (ஆரோகம்) भ्राजः (ப்ராஜ:) पटरः (படர:) पतङ्गः (பதங்க:) स्वर्णरः (ஸ்வர்ணர:) ज्योतिषीमान् (ஜ்யோதிஷீமான்) विभासः (விபாஸ:) என்ற ஏழு ஸௌர்யர்களாக இருந்து கொண்டு ஜலம் முழுவதையும் வற்றச் செய்து மூவுலகத்தையும் எறிக்கின்றன. இவ்விதம் மஹிமை பொருந்திய ஸௌர்ய கிரணங்கள் எல்லா வ்யாதிகளையும் போக்கடிக்கட்டும். 4

சைத்ரம் முதலிய 12 மாதங்களுக்கும் அதிகாரிகளான த்வாதஶாதித்யர்கள் ஒவ்வொரு மாதங்களிலும் ஆயிரக்கணக்கான தன் தன் கிரணங்களைக் கொண்டு பூமியைச் சுத்தம் செய்கிறார்கள். இவ்விதமுள்ள கிரணங்கள் 96000. இதன் மஹிமையை இந்த ஶ்லோகத்தில் கூறுகிறார்.

आदित्यानाश्रिताष्षण्णवतिगुणसहस्रान्विता रश्मयोऽन्ये
मासे मासे विभक्तास्त्रिभुवनभवनं पावयन्तः स्फुरन्ति ।
येषां भुव्यप्रचारे जगदवनकृतां सप्तरश्म्युत्थितानां
संसर्पे चाधिमासे व्रतयजनमुखास्सत्क्रिया न क्रियन्ते ॥ ५ ॥

"ஆதித்யாதார்ச்ரிதாஷ்ஷண்ணவதி
குணஸஹஸ்ராந்விதா ரச்மயோந்யே
மாஸே மாஸே விபக்தாஸ் த்ரிபுவன பவனம்
பாவயந்த: ஸ்புரந்தி |
யேஷாம் புவ்யப்ரசாரே ஜகதவன
க்ருதாம் ஸப்தரச்ம்யுத்திதாளும்
ஸம்ஸர்பே சாதிமாஸே வ்ரத
யஜனமுகாஸ்ஸத் க்ரியா ந க்ரியந்தே || 5

முன் ஶ்லோகத்தில் சொல்லிய ஏழு கிரணங்கள் விஸ்தாரத்தை யடைந்து 96000 கிரணங்களாக த்வாதஶாதித்யர்களை யடைந்து ஒவ்வொரு மாதங்களிலும் அதற்கு அதிகாரியான ஆதித்யன் மூலம் மூவுலகிலும் பரவி பரிசுத்தம் செய்கின்றன.

ஶுக்ல பக்ஷம் ப்ரதமை முதல் அமாவாஸ்யை முடிய சாந்திரமானப்படி ஒரு மாதம். மேஷாதி ராசிகளில் ஸூர்ய னிருக்கும் பொழுது அந்தந்த ராசியில் ஸூர்யனிருந்தால் ஸௌரமானப்படி ஒரு மாதம். சாந்த்ரமானப்படி ஒரு மாதத்திற்குள் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு ஸூர்யன் போகாவிட்டால் (மாதப் பிறப்பு இல்லாத பேளுல்) அது ஜ்யோதிஷ ஶாஸ்த்ர ப்ரஸித்தமான மத்ய கணனத்தால் அதிகாரிதமென்றும் ஸ்புடகணனத்தால் ஸம்ஸர்ப மாதமென்றும் சொல்லப்படுகிறது. த்வாதஶ ஆதித்யர்களில் இந்த மாதத்திற்கு அதிகாரியான ஆதித்யன் இல்லாததால் கிரணங்களால் பூமிக்கு சுத்தி இல்லை. இந்த அதிகமாதமான 13-வது மாதத்தில் ஸத்கர்மாக்கள் செய்வதில் பயனில்லாததால் வ்ரதாரம்பம், உத்யாபனம், யாகங்

கள் முதலியது செய்யப்படுவதில்லை. இவ்விதம் ஏழு கிரணங்கள் 96000 மாகப் பரவி மூவுலகத்தையும் சுத்தி செய்து ஸத்கர்மாக்களுக்கு பயனையளிக்கின்றன. த்வாதஶாதித்யர்களின் பெயரும் அவர்களின் கிரண ஸங்க்யையும்:—

| | | | | கிரணங்கள் | |
|---|---|---|---|---|---|
| 1. | சைத்ரம் | धाता | (தாதா) | 8000 | |
| 2. | வைசாகம் | अर्यमा | (அர்யமா) | 10,000 | ,, |
| 3. | ஜ்யேஷ்டம் | मित्रः | (மித்ரன்) | 7000 | ,, |
| 4. | ஆஷாடம் | वरुणः | (வருணன்) | 5000 | ,, |
| 5. | ஶ்ராவணம் | इन्द्रः | (இந்திரன்) | 9000 | ,, |
| 6. | பாத்ரபதம் | सविता | (ஸவிதா) | 10,000 | ,, |
| 7. | ஆஶ்வினம் | पर्जन्यः | (பர்ஜன்யன்) | 9000 | ,, |
| 8. | கார்த்திகம் | पूषा | (பூஷா) | 6000 | ,, |
| 9. | மார்கஶீர்ஷம் | देवेशः | (தேவேஶன்) | 7000 | ,, |
| 10. | பௌஷம் | भगः | (பகன்) | 11,000 | ,, |
| 11. | மாகம் | त्वष्टा | (த்வஷ்டா) | 8000 | ,, |
| 12. | பால்குனம் | विष्णुः | (விஷ்ணு) | 6000 | ,, |
| | | | ஆக. | 96000 | |

முன்பு 2-வது ஶலோகத்தில் மார்கஶீர்ஷத்திற்கு அம்ஶுவும், பௌஷத்திற்கு கபஸ்திமானும் சொல்லப்பட்டது, இங்கு தேவேஶன் பகன் என்று மாறிச் சொல்வதால் ஒருவருக்கு இரு பெயர் இருக்கலாம் அல்லது வேறு கல்பங்களில் அப்பெயர் இருக்கலாமென்று தெரிகிறது.

இவ்விதம் ஸூர்ய மண்டலம், அதிஷ்டான தேவதைகள், கிரண விஶேஷங்கள், இரதம், அதன்

ஸஞ்சாரம், முதலியது விஷ்ணு புராணம் முதலியதிலும், ஸ்ரீ பாகவதம் 5-வது ஸ்கந்தத்திலும் நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. 5

ஐந்து ச்லோகங்களால் இரதம், மண்டலம், கிரணங்கள் இதன் விஸ்தாரம் முதலியது வர்ணிக்கப்பட்டது. இனி 4. ச்லோகங்களால் மண்டலத்தின் நடுவில் விளங்கும் ஸுர்ய பகவானின் மஹிமை வர்ணிக்கப்படுகின்றது. இந்த 6-வது ச்லோகத்தில் ஸுர்யபகவான் வேதங்களால் ஸேவிக்கத் தகுந்தவரென்றும், ப்ரஹ்மஸ்வரூபமாக உபாஸிக்கத் தகுந்தவரென்றும் சொல்லப்படுகிறது.

आदित्यं मण्डलान्तः स्फुरदरुणवपुस्तेजसा व्याप्तविश्वं
प्रातर्मध्याह्नसायंसमयविभजनादृग्यजुस्सामसेव्यम् ।
प्राप्यं च प्रापकं च प्रथितमतिपथिज्ञानिनामुत्तरस्मिन्
साक्षाद्ब्रह्मेत्युपास्यं सकलभयहराभ्युद्गमं संश्रयामि ॥ ६ ॥

ஆதித்யம் மண்டலாந்தஸ்புர
தருணவபுஸ்தேஜஸா வ்யாப்தவிச்வம்
ப்ராதர்மத்யாஹ்ன ஸாயம்ஸமயவிபஜநாத்
ருக்யஜுஸ்ஸாமஸேவ்யம் |
ப்ராப்யஞ்ச ப்ராபகஞ்ச
ப்ரதிதமதி பதிஞானிநு முத்தரஸ்மின்
ஸாக்ஷாத் ப்ரஹ்மேத்யுபாஸ்யம் ஸகல
பயஹராப்யுத்கமம் ஸம்ச்ரயாமி || 6

ஸுர்ய மண்டலத்தின் மத்தியில் சிவந்த உருவத்துடன் காந்தியால் உலகம் முழுவதையும் ப்ரகாசப்படுத்திக்கொண்டு, காலையில் ருக்வேதத்தினு

லும், மத்யாஹ்னத்தில் யஜுர்வேதத்திலும் ஸாயங்காலத்தில் ஸாம வேதத்திலும், இவ்விதம் எம்பொழுதுமே வேதகோஷங்களால் கொண்டாடப் படுகின்றவரும், ப்ரஹ்மோபாஸனத்தினுல் உத்தராயண மார்கத்தில் செல்லும் யோகிகளால் அடையத் தகுந்தவரும், அந்த மார்க்கத்தையடையும்படி செய்கின்றவரும், ப்ரஹ்மஸ்வரூபமாக உபாஸிக்கத்தகுந்தவரும், உதயத்தால் ப்ராணிகளுக்கு பயத்தைப் போக்கி அபயத்தைக் கொடுப்பவருமான ஸூர்ய பகவானை ரக்ஷகனுக அடைகிறேன்.

உத்தராயணம் என்னும் மார்கம் ஸூர்ய கதிக்கு வடக்கேயுள்ளது. ஆகாயத்தில் செல்லும் ஸூர்ய பகவான் மூன்று மார்கமாகச் செல்லுகிறுர். தெற்கே ஒன்று, நடுவில் ஒன்று, வடக்கே ஒன்று. ஒவ்வொன்றும் மும்மூன்ருக விளங்குகிறது. அதாவது தெற்கே அஜ வீதி, ம்ருக வீதி, வைஶ்வானர வீதி என்று மூன்று. நடுவில் ஜாரத்கவ வீதி, கோ வீதி, ஆர்ஷப வீதி என்று மூன்று. வடக்கே நாக வீதி, ஐராவத வீதி, கோ வீதி என்று மூன்று. இந்த ஒன்பது வீதிகளிலும் அச்வின்யாதி 27. நக்ஷத்ரங்களில் மூன்று நக்ஷத்ரங்களுக்கு ஒரு வீதியாகச் செல்லுகிறுர். அதாவது அடியில் கண்டவாறு வடபுற மிருந்து வீதிகளை அறிய வேண்டும்:—

| | | | |
|---|---|---|---|
| 1. அச்வினீ, பரணி, கார்த்திகை. | 3 | நக்ஷத்ரங்களில் | நாக வீதியில் செல்கிறுர். |
| 2. ரோஹிணீ, ம்ருகசீர்ஷம், திருவாதிரை | 3 | ,, | கோ வீதியில் செல்கிறுர். |
| 3. புனர்வஸூ, புஷ்யம் ஆயில்யம். | 3 | ,, | ஐராவத வீதியில் செல்கிறுர். |

இந்த மூன்றுக்கும் ஐராவத மார்கம் என்று பெயர்.

| | | | |
|---|---|---|---|
| 4. மகம், பூரம், உத்திரம், | 3 | ,, | ஆர்ஷப வீதியில் செல்கிறார். |
| 5. ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, | 3 | ,, | கோ வீதியில் செல்கிறார். |
| 6. விசாகம், அனுஷம், கேட்டை, | 3 | ,, | ஜாரத்கவ வீதியில் செல்கிறார். |

இந்த மூன்றுக்கும் ஜாரத்கவ வீதி என்று பெயர்.

| | | | |
|---|---|---|---|
| 7. மூலம், பூராடம், உத்திராடம், | 3 | ,, | வைச்வாநர வீதியில் செல்கிறார். |
| 8. திருவோணம், அவிட்டம், சதயம், | 3 | ,, | ம்ருக வீதியில் செல்கிறார். |
| 9. பூரட்டாதி, உத்தரட்டாதி ரேவதி. | 3 | ,, | அஜ வீதியில் செல்கிறார். |

இந்த மூன்றுக்கும் வைச்வானர வீதி என்று பெயர். வைச்வானர மார்க்கத்திற்கு தென் புறத்தில் தக்ஷிணாயனமார்க்க மிருக்கிறது. இதற்கு பித்ருயானம் தூமாதி மார்க்கம் என்றும் பெயர் உண்டு. ஐராவத மார்க்கத்திற்கு வடபுறத்தில் உத்தராயண மார்க்கமிருக்கிறது. இதற்கு தேவயானம், அர்ச்சிராதிமார்க்கம் என்று பெயர் உண்டு. ஸூர்யன் உத்தராயண மார்க்கத்தினால் போகும் யோகிகளை தன் கிரணம் அவர்களின் ஹ்ருதயத்தில் வ்யாபித்து இருக்கிற படியால் கிணற்றிலிருக்கும் குடத்தை கயிற்றினால் இழுப்பதுபோல் சரீரத்லிருந்து இழுத்து தன் மண்டலத்தின் வழியாக ப்ரஹ்ம லோகம் போகும்படிச் செய்கிறார். இந்த அர்ச்சிராதி மார்க்கத்தைப் பற்றி சாந்தோக்யம் முதலிய உபநிஷத்துக்களிலும், ஸ்ரீ பகவத் கீதையிலும், சொல்லப்பட்டிருக்கிறது. அர்ச்சிஸ், அஹஸ், சுக்ல

பக்ஷம், உத்தராயணம், வாயு, ஸம்வத்ஸரம், தேவர்கள், ஸூர்யன், சந்திரன், வித்யுத், வருணன், இந்திரன், ப்ரஜாபதி இவ்விதம் 13 ஸ்தானங்கள் அந்த வழியில் இருக்கின்றன.

இங்கு ஸூர்யன் செல்லும் மார்க்கத்திற்கு வடக்கே உத்தராயண மார்க்கமிருந்தால் அந்த வழியில் செல்லுபவர்கள் ஸூர்ய மண்டலத்தை எப்படி அடைய முடியுமென்று சங்கை ஏற்படலாம். அதற்கு ஸமாதானம்: ஸூர்யன், இந்திரன், வருணன் முதலியவர்களுக்கு ஜ்யோதிச் சாஸ்திரப்படி லோகவ்யவஹாரத்தை நடத்துவதுடன், போக பூமியாகத் தனிப்பட்ட லோகமும் உண்டு, அங்கு மிருக்கிறார்கள். அதை அடைகிறார்கள் என்று. 6

இந்த ச்லோகத்தில் 12 மாதங்களுக்கும் அதிகாரிகளான த்வாதசாதித்யர்கள் ப்ரதானரான ஸூர்ய பகவானை உபாஸிக்கிறார்கள் என்பதை விளக்குகிறார்:—

यच्छक्त्याधिष्ठितानां तपनहिमजलोत्सर्जनादिर्जगत्यां
आदित्यानामशेषः प्रभवति नियतः स्वस्वमासाधिकारः ।
यत्प्राधान्यं व्यनक्ति स्वयमपि भगवान् द्वादशस्तेषु भूत्वा
तं त्रैलोक्यस्य मूलं प्रणमत परमं दैवतं सप्तसप्तिम् ॥ ७ ॥

யச்சக்த்யாதிஷ்டிதாநாம் தபந
ஹிமஜலோத்ஸர்ஜநாதிர் ஜகத்யாம்
ஆதித்யாநா மசேஷ: ப்ரபவதி
நியத: ஸ்வஸ்வமாஸாதிகார: |

யத்ப்ராதான்யம் வ்யநக்தி ஸ்வயமபி
பகவான் த்வாதசஸ்தேஷு பூத்வா
தம் த்ரைலோக்யஸ்ய மூலம் ப்ரணமத
பரமம் தைவதம் ஸப்தஸப்திம் ‖ 7

சைத்ரம் முதலிய 12 மாதங்களுக்கு அதிகாரிகளாக த்வாதசாதித்யர்கள் இருப்பதாகக் கூறினோம். அவர்களின் காந்திகளால் உலகத்தில் தாபம் ஜலம் பனிமுதலியது ஏற்படுகின்றது. அவர்களும் ஸௌர்ய பகவானின் சக்தியினால் அனுக்ரஹிக்கப்பட்ட தன் தன் மாஸாதிகாரத்தைச் செலுத்தும் திறமை வாய்ந்தவர்களாக ஆகிறார்கள். மேலும் எல்லா தேவதைகளுமே ஸௌர்ய பகவானின் சக்தியினால் விளங்குகிறார்கள். ஸர்வேச்வரரான நாராயணனும் த்வாதசாதித்யர்களில் ஒன்றான விஷ்ணு என்ற ரூபத்துடன் கச்யப ப்ரஜாபதிக்கு உபேந்திரன் என்ற புத்ரனாக ஆவிர்பவித்தார். இந்த ரூபத்தை. 'इदं विष्णुर्विचक्रमे', 'यतो विष्णुर्विचक्रमे', 'विचक्रमाणस्त्रेधोरुगायः' 'त्रिर्देवेभ्यः पृथिवीमेष एतां', என்ற வேத வாக்யங்கள் கொண்டாடுகின்றன. மேலும் 'सूर्य आत्मा जगतः तस्थुषश्च' ஸ்தாவர ஜங்கமாத்மகமான ப்ரபஞ்சமும் ஸௌர்யனுடைய ஸ்வரூபமென்று வேதம் கூறுகிறது. இவ்விதமுள்ள ஸௌர்யபகவானை நமஸ்காரம் செய்யுங்கள்.

7

முன் ச்லோகத்தில் 12 கணங்களில், ப்ரதானரான ஆதித்யன், ஸௌர்ய பகவானை யுபாஸிப்பதாகக் கூறினோம். இந்த ச்லோகத்தில் மற்றுமுள்ள அப்ஸரஸ் முதலியவர்களும் உபாஸிக்கிறார்களென்று சொல்லப்படுகிறது.

स्वस्त्रीगन्धर्वयक्षा मुनिवरभुजगा यातुधानाश्च नित्यं
नृत्तैः गीतैरभीशुग्रहनुतिवहनैरग्रतस्सेवया च ।
यस्य प्रीतिं वितन्वन्त्यमितपरिकरा द्वादश द्वादशैते
हृद्याभिर्वालखिल्याः सरणिफणितिभिस्तं भजे लोकबन्धुम् ॥८॥

ஸ்வஸ்ஸ்த்ரீகந்தர்வயக்ஷா முனிவர
புஜகா யாதுதாஞுஸ்ச நித்யம்
ந்ருத்தைः கீதைரபீஶுக்ரஹ
நுதிவஹநைரக்ரதஸ் ஸேவயா ச |
யஸ்ய ப்ரீதிம் விதந்வந்தயமித
